ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2225/8 - 2021 අප්‍රේල් මස 27 වැනි අඟහරුවාදා - 2021.04.27

*2225/8 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்***

*2 மற்றும் 5 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.*

*ஆயினும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, கைத்தொழில் அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில், அரசாங்கத்துக்குச் சொந்தமான பீ. சீ. சீ. லங்கா லிமிடட்டினால் இறக்குமதி செய்யப்படும், மாதமொன்றிற்கு 13,000 மெ. தொ. அளவு வரையான, பிற - உலர்த்திய தேங்காய்கள் (இ. மு. குறியீடு 0801.11.90 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள) மீது அறவிடக்கூடிய, கி. கி. இற்கு 300 ரூபா விசேட வியாபாரப் பண்ட அறவீட்டிலிருந்து கி. கி. இற்கு 1 ரூபாயினை அறவிட்ட பின்பு மீதமுள்ள தொகை கைவிடப்படல் வேண்டும் என இத்தால் கட்டளையிடுகின்றேன்.*

*இக்கட்டளை 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி முதல் ஆரம்பமாகும் மூன்று (03) மாத காலப்பகுதிக்கு செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

***மஹிந்த ராஜபக்ஷ,***
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2021, ஏப்பிறல் 27.*

**அட்டவணை**

| நிரல் I | | | | நிரல் II |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| | இ. மு. தலைப்பு | இ. மு. குறியீடு | விவரணம் | |
| 1 | 08.01 | 0801.11.90 | பிற - உலர்த்திய தேங்காய்கள் | கிலோ கிராமிற்கு ரூபா 300.00 |

05-142

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.